வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    15.06.2024 சனிக்கிழமை    இதழ் : 167    பக்கங்கள் : 12

# யாழ். வந்த இந்திய அதிகாரிகள் தமிழ் தலைவருடன் இரகசிய பேச்சு

## தமிழ் பொது வேட்பாளர் குறித்து பிரஸ்தாபிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

**நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த இந்திய அதிகாரிகள் குழு ஒன்று தமிழ்த் தேசிய அரசியல் கட்சி ஒன்றின் தலைவரை சந்தித்து இரகசிய பேச்சில் ஈடுபட்டது என்று நம்பகரமாக அறிய வருகின்றது.**

பலாலி விமான நிலயம் ஊடாக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்த இந்திய அதிகாரிகள் குழுவே தமிழ்த் தேசிய அரசியல் கட்சி ஒன்றின் தலைவரை இரகசியமாக அவரின் இடத்தில் சந்தித்துவிட்டு திரும்பிச் சென்றுள்ளது.

அந்தத் தமிழ்த் தலைவரிடம் உடனடியாகவே சந்திப்புக்கு அனுமதி பெறப்பட்டு, மூடிய அறைக்குள் சில நிமிடங்கள் இந்த சந்திப்பு இடம் பெற்றதாகவும் இதன் போது, தமிழ் பொது வேட்பாளர் குறித்து பேசப்பட்டதாகவும் அறிய வருகின்றது. (ஐ)

# 70 வீத ஊதிய உயர்வை நாம் ஏற்கவேமாட்டோம்!

## நீதிமன்றத்தை நாடவுள்ளதாக தோட்ட முதலாளிமார் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 70 வீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்ற சம்பள நிர்ணய சபையின் முடிவை எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை - இந்த முடிவுக்கு எதிராக மேன்முறையீட்டு உச்ச நீதிமன்றங்களை நாடவுள்ளோம் - இவ்வாறு பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த சம்மேளனம் விடுத்த ஊடக அறிக்கையில்,

வியாபார நிறுவனங்களின் நீடித்த நிலைத்தன்மைக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பேணவும் சம்பள அதிகரிப்பு உற்பத்தித் திறனுடன் நெருக்க மாக இணைக்கப்படவேண்டும்.

11

# சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு இந்திய ஆளும் கட்சி ஒத்துழைப்பு!

## கஜேந்திரன் எம். பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 15

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சி (பா. ஜ. க.) சிவசேனை அமைப்பின் ஒத்துழைப்புடன் தமிழர் பகுதிகளை சிங்கள - பௌத்த மயமாக்க உதவிகளை வழங்குகிறது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடக்கும் சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு இந்தியாவின் பா. ஜ. கவின் விரிவாக்கமாக உள்ள ஈழம் சிவசேனையின் முகவர்கள் தமிழர் நிலத்தை ஆக்கிரமித்துக் கட்டப்படும் பௌத்த விகாரைகளுக்கு அங்கீகாரம் கொடுக்கும் செயல்பாடுகளை

11

# தமிழர்மீது பௌத்தம் திணிக்கப்படவில்லை!

## சிவசேனை அமைப்பு பதில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பௌத்தர்கள் எங்கள் மீது மதத்தை திணிக்கவில்லை என்று கூறியுள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன்.

தமிழர் பகுதியில் பௌத்த மயமாக்கலுக்கு சிவசேனை அமைப்பு உதவுகிறது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரன் எம். பியின் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு பி. பி. சி. தமிழுக்கு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு, "இலங்கையில் இந்துக்களை பௌத்தர்கள்

11

# கடன் மறுசீரமைப்பில் இலங்கை முன்னேற்றம்

## சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, ஜூன் 15

கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முன்கொண்டு செல்வதற்கு போதுமான முன்னேற்றம் இலங்கையிடம் இருக்கிறது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான திட்டத்தின் பணிப்பாளர் பீற்றர் ப்ரூவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரம் இன்னும் பாதிப்படையக்கூடிய நிலையிலேயே உள்ளதுடன், கடன் மறுசீரமைப்பானது கத்தி முனையிலேயே இருக்கிறது. கடன் மறுசீரமைப்பு வேகத்தை தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டியது அவசியமாகும் - என்றும் கூறினார். (ஐ)

# தமிழ் பொது வேட்பாளர் களமிறங்க நான் தயார்!

## அனந்தி சசிதரன் சொல்கிறார்

வடமராட்சி, ஜூன் 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்குவதற்கு நான் தயாராக உள்ளேன் என்று கூறியுள்ளார் ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகம் திருமதி அனந்தி சசிதரன்.

அத்துடன், "என்னை விடவும் ஆற்றலுள்ள வேறு எவரேனும் நம்பகமானவர் நிறுத்தப்படுவாரானால் அவரை நான் ஆதரிக்கவும் தயாராக இருக்கிறேன்", என்றும் கூறியுள்ளார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று

11

# கதிர்காமம் பாதயாத்திரையை முடக்குவதற்கு சதி முயற்சியா?

காரைதீவு, ஜூன் 15

வடக்கு - கிழக்கு இந்து மக்களின் பாத யாத்திரையை முடக்கும் நோக்கில் கதிர்காமத்துக்கான காட்டுப் பாதை திறப்பது திட்டமிட்டு தாமதிக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதேநேரம், கதிர்கா மத்துக்கான காட்டுப் பாதை திறப்பு தினம் தொடர்பான குழப்பத்தை தீர்த்து வைக்குமாறு கோரி ஜனாதிபதி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை 5ஆம் திகதி வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆலயத்தின் பெருந் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இந்த நிலையில், பாரம்பரியமாக தொடரும் தொண்டைமானாறு சந்நிதி முருகன்

11

# 7 மாவட்டங்களில் டெங்கு உச்சளவில்

கொழும்பு, ஜூன் 15

யாழ்ப்பாணம் உட்பட 7 மாவட்டங்களில் டெங்கு நோய் பரவல் உச்சளவில் அதிகரித்துள்ளதாக சுகதார திணைக்களம் அறிக்கையில் தெரவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, கண்டி, குருநாகல் மாவட்டங்களிலேயே டெங்கு பரவல் உச்சம் பெற்றுள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் நாட்டில் 26 ஆயிரத்து 84 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 9 பேர் மரணமடைந்தனர்.

மேல் மாகாணத்தில் 9 ஆயிரத்து 558 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் அந்தத் தரவு தகவல் தெரிவித்தது. (ஐ)

# போதைப் பொருள் கடத்தல் நாட்டில் குறைவடைந்துள்ளது

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

மேல் மற்றும் தென் மாகாணங்களை போன்று ஏனைய மாகாணங்களிலும் பரவி வந்த போதைப்பொருள் கடத்தல்கள் தற்போது குறைவடைந்துள்ளன என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் பின்னரே போதைப்பொருள் கடத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன.

11

# படைகளின் போர் குற்றங்களுக்கு எதிராக சாட்சியங்கள் சேகரிப்பு!

## வெளியக பொறிமுறை மூலம் நடப்பதாக சரத் வீரசேகர சாடல்

கொழும்பு, ஜூன் 15

"பிரிவினைவாத போரை முறியடித்த இராணுவத்தினரை போர் குற்றம் இழைத்தனர் என்று குற்றஞ்சாட்டி அவர்களுக்கு எதிராக போர்குற்ற சாட்சியங்களை சேகரிக்கும் வெளியக பொறிமுறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சுவிற்சர்லாந்தின் - ஜெனிவா நகரில் 46/1 பிரேரணைக்கு அமைய கடந்த இரண்டு வருடங்களாக இந்த அமைப்பு செயல்படுகிறது" - என்று சரத் வீர சேகர எம். பி. தெரிவித் துள்ளார்.

இந்த நாட்டின் இராணுவ தளபதிகளுக்கு எதிராக கணிசமானளவு சாட்சிகள் அவர்களிடம் இருக்கின்றன என்று குறித்த

11

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

கடந்த ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் தான் நடத்திய அரசியல் கருத்துக்களம் நிகழ்ச்சியில் தமிழ் அரசின் எம். பி. சுமந்திரன் தெரிவித்த கருத்துகள் பற்றி மறுநாளே இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

பொதுவேட்பாளர் பற்றி தமிழ் அரசு கட்சி இன்னமும் உத்தியோக பூர்வமாக முடிவு எதனையும் எடுக்காதபோதிலும் பொதுவேட்பாளருக்கு எதிராக பிரசாரம் செய்வேன் என்றும் அவருக்கு மக்கள் வாக்களிப்பதைத் தடுப்பேன் என்றும் தெளிவாக - உறுதியாக தெரிவித்திருந்தார் சுமந்திரன்.

அவர் இவ்வாறு கூறியபோது, மேடைக்கு எதிரே பார்வையாளர் வரிசையில் முதலாவதாக அமர்ந்திருந்தார் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா. இதுபற்றியும் அன்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

மூன்று தினங்களின் பின்னர், தலைவர் மாவை சேனாதிராசா, கட்சி இன்னமும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து முடிவு எடுக்கவில்லை என்றும் சுமந்திரனின் கருத்து - தனிப்பட்ட கருத்து எனவும் கூறியிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தமது தேர்தல் அறிக்கைகளை வெளியிட்ட பின்னர் அவற்றை பார்த்த பின்னரே தமிழ் அரசு கட்சி தனது முடிவை அறிவிக்கும் என்றும் மாவை சேனாதிராசா அறிவித்திருக்கிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஈழநாடு தனது ஆசிரியத் தலையங்கத்தில் மாவையை ஒரு பலவீனமான தலைவர் என்று சுட்டிக் காட்டியிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய காலங்களில், எந்தவோர் அரசியல் விடயத்திலும் முடிவெடுப்பது கடைசி நாட்களில்தான் என்பது நமக்கு தெரிந்ததுதான். அது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானமாக இருக்கட்டும் அல்லது வரவு - செலவுத்திட்ட வாக்களிப்பாக இருக்கட்டும் எதன்போதும் வாக்கெடுப்புக்கு முதல்நாள் இரவே சம்பந்தன் இல்லத்தில் கூடுகின்ற கூட்டமைப்பு மறுநாள் என்ன செய்வது என்பதை முடிவு செய்யும்.

இதேபோலத்தான் இப்போதும் மாவை சேனாதி அண்ணர், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது தொடர்பாகவும் எப்போது முடிவெடுக்கப் போகிறார் என்பதை அறிவித்திருக்கிறார்.

அதாவது, அந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பின்னரே அவர் முடிவெடுப்பாராம். அதற்கு பின்னர், தமிழ் கட்சிகள் எல்லாம் கூடி ஒரு வேட்பாளரை தெரிவுசெய்து, போட்டியிடுவது நடக்கக்கூடிய விவகாரம் இல்லை என்பதால்தான், தான் அதற்கு எதிராக பிரசாரம் செய்வேன் என்று சுமந்திரன் முடிவெடுத்திருக்கலாம்.

அதுவல்ல, நாம் இன்று சொல்ல வருவது, சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் கூட்டம் போட்டு தமிழ் பொதுவேட்பாளர் விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவித்த அதேகாலப்பகுதியில் அவரின் நண்பரும் தமிழ் அரசின் இன்னோர் எம். பியுமான சிவஞானம் சிறீதரன் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர், தான் போகின்ற நாடுகளில் எல்லாம் பொதுவேட்பாளர் போட்டியிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பேசியமையைக் கவனிக்க முடிந்தது. ஆனால் அவரோ, அது தனது முடிவுதான் என்றும் கட்சி என்ன முடிவெடுக்கின்றதோ அதனையே தானும் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும் எனவும் பக்குவமாக தெரிவித்து வருவதையும் அவதானிக்க முடிந்தது.

ஒரு கட்சிக்காரராக - கட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவராக அவர் தெரிவிக்கும் கருத்துகள் நியாயமானவைதான். ஆனால், அரசியல் ரீதியாக அவர் அந்த இடத்தில் தோற்றுக்கொண்டிருக்கிறார் என்பதையும் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

அவரின் பலத்தையும் பலவீனத்தையும் நன்கு தெரிந்து வைத்திருப்பதால்தான், அவரின் அரசியல் எதிரிகள் சரியாகக் காய்நகர்த்தி வருகின்றனர்.

பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவுக்கு தான் எதிரானவர் என்றாலும் கட்சி அதற்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தால் நானும் கட்சியின் முடிவுக்கு கட்டுப்பட வேண்டியவன்தான் என்று சுமந்திரன் இதுவரை சொல்லவில்லை.

அவர் தான் எதிர்ப்பேன், எதிர்த்து பிரசாரம் செய்வேன் என்று திட்டவட்டமாக தெரிவித்துவிட்ட பின்னர், அதனை ஆதரிக்கின்ற சிறீதரன், கட்சிக்கு கட்டுப்படுவேன் என்பது, கடைசியில் பொது வேட்பாளருக்கு எதிரான நிலைப்பாட்டை கட்சி எடுத்தாலும் சுமந்திரனே கட்சியில் இப்போதும் முடிவெடுக்கின்ற அதிகார நிலையில் இருக்கிறார் என்பதையே வெளிச்சம் போட்டுக்காட்டும். அதாவது சிறீதரன் இங்கே தோற்றுப்போனவர் ஆகிவிடுவார்.

மாவை அண்ணர் சொல்வது போல, ஜனாதிபதி வேட்பாளர்கள் எவருமே, தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேசிய இனப்பிரச்னைக்கு தமது தீர்வு என்ன என்பதை முன்வைக்கப்போவதில்லை. அதிகம் ஏன் இன்று அரசமைப்பில் இருக்கும் பதின்மூன்றாவது அரசமைப்பு திருத்தத்தையே முழுமையாக - அதாவது பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரங்களையும் அமுல்படுத்தப்போவதாகக்கூட கூறப்போவதில்லை என்பது நமக்கு ஏற்கனவே தெரிந்ததுதான். எதற்காக அதுவரை காத்திருக்கப் போவதாக மாவை அண்ணர் கூறுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இனப்பிரச்னைக்கு தமது ஆட்சியில் புதிய அரசமைப்பு மூலமே தீர்வு காணப்படும் என்று தம்மைச் சந்தித்த ஜே. வி. பிகாரர்கள் பின்னர் கூறியபோது அவர்களின் பின்னால் இருந்து கேட்டு ரசித்த அவர், சிலவேளை அவர்கள் புதிய அரசமைப்பில் சமஷ்டி தீர்வை வழங்குவார்கள் என்று நம்புகின்றாரோ என்னவோ?

ஊர்க்குருவி.

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொன்விழா இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம், உலகத் தமிழ் பண்பாட்டு மையம் இணைந்து நடத்தும் பொன்விழா மற்றும் 17ஆவது பன்னாட்டு மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று சனிக்கிழமை இரு அமர்வுகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வில் காலை 9.15 மணிக்கு "கிராமத்திலிருந்து உலகளாவிய நிலை வரை" நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.


முற்பகல் 10.30 மணிக்கு அறிவியில் அமர்வு ஆரம்பமாகும். அறிமுக உரையை மறவன்புலவு சச்சிதானந்தம் ஆற்றுவார். தலைமையுரையை கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வி. கனகசிங்கம் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து ஆய்வரங்க அமர்வு வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும்.

இதேநேரம், முற்பகல் 10.30 மணிக்கு பொன் விழா நிகழ்வு - பொதுக் குழு கூட்டமும் நடை பெறும்.

தமிழக முன்னாள் அமைச்சர் ந. நல்லுசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சிறப்பு ரையை இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலை வர் மாவை. சோ. சேனாதிராசா ஆற்றுவார்.

தொடர்ந்து உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் மாநாடு நடைபெறும். இதில், உலக நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பர். அத்துடன், உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் செயல் குழு கூட்டம் நடைபெறும். (ஐ)



பிரசித்திபெற்ற பாசையூர் அந்தோனியார் ஆலயத்தின் கூடு சுற்றும் நிகழ்வு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றபோது...!

# "மகிந்தானந்த நடத்திய தாக்குதல் குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை!"

கொழும்பு, ஜூன் 15

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தன்மீது தாக்குதல் நடத்தி 11 நாட்கள் கடந்துள்ளபோதிலும் இதுவரை எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த 3ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஆளுங்கட்சியின் பாராளுமன்ற குழுக்கூட்டத்தின்போது இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

தம்மால் இன்னும் நடக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ தெரிவித்தார். (அ)

# விமல் அணியின் முதல் கூட்டம் 18ஆம் திகதி நுகேகொடையில்!

கொழும்பு, ஜூன் 15

சர்வஜன அதிகாரம் எனும் அரசியல் கூட்டணியின் முதலாவது மக்கள் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது மேலும் சில தேசியவாத அமைப்புகளும், கட்சிகளும் மேற்படி கூட்டணியுடன் இணையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சர்வஜன அதிகாரத்தின் நிலைப்பாடும் இதன்போது தெளிவுபடுத்தப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தொழில் அதிபர் திலித் ஜயவீர உள்ளிட்டவர்கள் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளனர். சிங்கள தேசியவாத அமைப்புகளும் இணைந்துள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷவின் வியத்கமவில் இருந்த உறுப்பினர்களும் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளனர். (அ)

# ரயிலுடன் மோதி பெண் மரணம்!

கொழும்பு, ஜூன் 15

ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை களுத்துறை - பலப்பிட்டி - மிட்டியாகொடையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காலியிலிருந்து ரம்புக்கனை நோக்கி பயணித்த ரயிலுடனே மோட்டார் சைக்கிள் மோதி விபத்துகுள்ளானது.

காயமடைந்தவர் பலப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர், ஹிக்கடுவையை சேர்ந்த 53 வயதுடைய பெண்ணாவார். (ஐ)

# கடந்த 5 மாதங்களில் 150 யானைகள் மரணம்!

கொழும்பு, ஜூன் 15

கடந்த 5 மாதங்களில் 150 காட்டு யானைகள் உயிரிழந்தன. உயிரிழந்தவற்றில் பெரும்பாலானாவை இளம் யானைகள் என்று கூறப்படுகின்றன.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 28 யானைகளும்மின்சாரம் தாக்கி 21 யானைகளும் உணவில் மறைத்து வைக்கப்பட்ட வெடிபொருள் மூலம் 13 யானைகளும் நஞ்சேற்றத்தால் 2 யானைகளும், ரயில் விபத்தால் 3 யானைகளும், வீதி விபத்தால் ஒரு யானையும் நீரில் அடித்துச் சென்று 7 யானைகளும், ஏனைய விபத்துக்களால் 4 யானைகளும் உயிரிழந்தன என்று வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையே அதிகரித்துவரும் முரண்பாடுகளினால் 45 பேர் உயிரிழந்தனர்.

கடந்த 2023ஆம் ஆண்டு மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் காரணமாக 488 யானைகள் உயிரிழந்தன. இதேவேளை, 184 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 15.06.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், ஆனி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நுகேகொடை பயணம் வெற்றியளிக்குமா?

2015இல் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷ, தனது அரசியல் எழுச்சிக்கான பயணத்தை நுகேகொடையிலிருந்து ஆரம்பித்திருந்தார். தற்போது அதனை, விமல் வீரவன்ஸ - உதயகம்மன்பில - திலீப் ஜயவீர ஆகியோரின் கூட்டணி தங்களின் எழுச்சிக்கான அத்திபாரமாக பயன்படுத்தலாம் என்று எண்ணுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சிங்கள தேசியவாத அரசியல் பெரும் பின்னடைவை சந்தித்திருந்தது. ஆனால், இந்தப் பின்னடைவு பலரும் கருதுவது போன்று சிங்கள தேசியவாதத்தின் பின்னடைவு அல்ல. மாறாக, சிங்கள - பௌத்த தேசியவாதத்தை தங்களின் பிரதான அரசியல் முதலீடாகக் கொண்டிருப்பவர்களே பின்னடைவை சந்தித்திருக்கின்றனர். அவ்வாறானவர்கள் தங்களை மீளவும் ஒருங்கிணைக்கவும் தங்களை ஒரு பிரதான குரலாக முன்னிறுத்திக் கொள்ளவும் வாய்ப்புகளை தேடுகின்றனர். இவ்வாறானதொரு நிலையில்தான் சிங்கள தேசியவாதத்தை உயர்த்திப் பிடிப்பதை மட்டுமே தங்களின் அரசியல் முதலீடாகக் கொண்டிருக்கும் அனைவரும் ஜனாதிபதித் தேர்தல் மூலம் மீளவும் ஒரு தரப்பாக தங்களை அடையாளப்படுத்த முயற்சிக்கின்றனர்.

நுகோகொடையில் இவர்களின் அரசியல் எழுச்சிக்கான பயணம் ஆரம்பிக்கப்படவுள்ளது. சிங்கள தேசியவாதம் அரசியலில் பின்னடைவுகளை சந்தித்தாலும் பௌத்த மதபீடங்கள் மூலம் அதன் இருப்பு இப்போதும் பலமாகவே இருக்கின்றது - அது பலமாக இருக்கும் வரைக்கும் சிங்கள - பௌத்த தேசியவாதம் வீழ்ச்சியுற்று விடுமென்று கருத முடியாது. எண்ணிக்கையில் சிறுபான்மை மக்களின் ஆதரவை எதிர்பார்த்திருக்கும் அரசியல் கட்சிகள் சிங்கள தேசியவாதத்தை உயர்த்திப் பிடிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர் - அவர்கள் அவ்வாறு எண்ணினாலும் அது சாத்தியமில்லை.

அவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு ஏனைய மக்களின் ஆதரவு இன்றியமையாதது. இதன் காரணமாகத் தங்களின் தேசியவாத முகத்தை அதிகம் காண்பிக்காமல் இருப்பதே அவர்களின் அணுகுமுறையாக இருக்கும். ஆனால், சிங்கள தேசியவாத வாக்குகளை கவர்வதற்கான ஆட்களையும் தங்களின் அணியில் வைத்திருப்பர். இந்த அடிப்படையில்தான் முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலரை சஜித் தனது அணியில் இணைத்திருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலை பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்க இதுவரையில் ராஜபக்ஷ தரப்போடுதான் இருக்கின்றார். ரணில் - சஜித் அரசியல் திருமணம் நடக்குமா அல்லது இல்லையா என்பது இதுவரையில் தெளிவற்ற ஒன்றாகவே இருக்கின்றது. அதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு போலும் தெரிகின்றது எனினும் மாற்றங்களை இப்போதைக்கு எடுத்துரைக்க முடியாது. ஒருவேளை ரணில் தனியாக போட்டியிடும் நிலைமை ஏற்பட்டால் நிச்சயம் மும்முனை போட்டியே இடம்பெறும். அது நான்காவது அணிக்கான வாய்ப்பையும் வழங்கலாம்.

இந்த நிலையில் சிங்கள - பௌத்த தேசிவாதத்தை பிரதிநிதித்துவம் செய்வது யார் என்னும் கேள்வியும் உண்டு. அதனை முழுமையாக ஜே.வி. பியிடம் விட்டுவிடுவதற்கும் ஓர் அணி விரும்பாது. இந்த நிலையில் தான், சிங்கள - பௌத்த தேசியவாதத்தை எழுச்சியுற செய்யும் முயற்சியில் ஓர் அணியினர் நுகேகொடை பயணத்தை ஆரம்பிக்கின்றனர். இவர்கள் அடிப்படையில் இந்திய எதிர்ப்பை - (அதற்குள் 13ஆவது திருத்தச் சட்ட எதிர்ப்பும் அடங்கும்) பிரதானமான முதலீடாகக் கொண்டிருப்பவர்கள். இவர்களின் எழுச்சிக்கு சீனாவின் ஆசீர்வாதமும் இருக்கும். ஆனால், நேரடியாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், சீன சார்பு அரசியல் உயரடுக்கு ஒன்று சீனாவுக்கு கட்டாயம் தேவை.

இவர்கள் அரசியலில் எழுச்சியுறுவார்களா? முடிந்த முடிவாக எதனையும் இப்போது கூறமுடியாது. ஆனால், இவ்வாறானவர்களுக்கான இடம் முற்றிலுமாக இல்லாமல் போய்விடவில்லை. ஆனால், ராஜபக்ஷக்களோடு இணைந்துதான் இதுவரையில் இவர்கள் செயற்பட்டு வந்திருக்கின்றனர்.



வரலாற்று பெருமை மிகுந்த நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் 7ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் இரவு கைலாய வாகனத் திருவிழாவில் பரிவார மூர்த்திகள் சகிதம் அம்பாள் பக்தர்களுக்கு அருள் பாலித்த காட்சி...!

# முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது!


கொழும்பு, ஜூன் 15

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரன் ஏற்பாட்டில் நடந்த இந்த கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

விவசாயம், காணி, மகாவலி அதிகார சபை, வனவளத் திணைக்களம், நன்னீர் மீன்பிடி , கடற்றொழில் மற்றும் மீனவர்கள் தொடர்பான பிரச்னைகள் முதன்மையாக கலந்துரையாடப்பட்டு சில தீர்மானங் கள் எடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மல நாதன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகநாதலிங்கம், முல்லைத்தீவு மேலதிக மாவட்ட செயலாளர் குணபாலன், வடமாகாண திணைக்களங்களின் செயலாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் , பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



கொக்குவில் கற்புலத்து (நந்தாவில்) மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் மஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றபோது...!

# கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் அலுவலர்களுக்கு திடீர் இடமாற்றம்!

யாழ்ப்பாணம், ஜூன் 15


கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 5 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் முதல் அமுலாகும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 4 தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 5 பொலிஸாருக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் வழங்கப்படும்போது காரணம் குறிப்பிடப்படுவது வழக்கமென்றும், தற்போது எந்த காரணமும் குறிப்பிடாமல் இவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 15 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 01

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.30 - 08.30 |
| ராகு காலம் | : | 09.00 - 10.30 |
| திதி | : | சூன்ய |




**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை அமையும். சக ஊழியர்கள் வேலைகளை விரைந்து முடிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**கன்னி**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். ஊழியர்களிடம் விட்டு கொடுத்து போங்கள். விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கறுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். சாதிக்கும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்த அசதி சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப்போன விஷயங்கள் முடியும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உயரதிகாரிகள் உங்களை குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் ராஜ தந்திரத்தால் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். வெற்றி பெறும் நாள்.

# முப்பெரும் விழாவால் எந்த பலனும் இல்லை

## தி. மு. கவை சாடிய அண்ணாமலை

சென்னை, ஜூன் 15

தி. மு. க. முப்பெரும் விழாவால் மக்களுக்கு எந்தப் பலனும் இல்லை என்று

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


கோவையில் ஜூன் 15 (இன்று) முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையில் தி. மு. க. முப்பெரும் விழா நடத்தவிருப்பதாக அறிந்தேன். முதலில் ஜூன் 14 ஆம் திகதி நடத்தவிருப்பதாக முடிவு செய்யப்பட்ட இந்த விழா, பண மோசடி வழக்கில், தி. மு. க. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டது கடந்த ஆண்டு அதே ஜூன் 14 நாளில்தான் என்பதால், அந்த நாளில் முப்பெரும் விழாவாகக் கொண்டாட வேண்டுமோ என்ற பயத்தில், விழாவை ஒரு நாள் தள்ளி வைத்திருக்கிறது என்பதையும் அறிந்தேன். வாழ்த்துகள்.

கோவை மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழக பா. ஜ. க. சார்பில் கொடுக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில், பத்தில் ஒரு பங்கை தி. மு. க. அரசு நிறைவேற்ற முன்வந்தாலே, கோவையின் பல ஆண்டு கால ஏக்கம் தீரும். ஆனால், அதை விடுத்து வீண் விளம்பரத்துக்கு விழா எடுப்பதனால், மக்களுக்கு எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை என்று அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# பொது வழுங்கல் திட்டத்தில் தமிழக அரசு படுதோல்வி!

## அன்புமணி கடும் கண்டனம்



சென்னை, ஜூன் 15

சிறப்பு பொது வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு படுதோல்வியடைந்து விட்டது என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஏழை மக்களுக்கான அத்தியாவசியத் தேவையான பருப்பு, பாமாயில் ஆகியவை தொடர்ந்து மூன்றாவது மாதமாக வழங்கப்படாததை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இந்த விஷயத்தில் காட்டப்படும் அலட்சியம் கடுமையாக கண்டிக்கத்தக்கது.

பருப்பு, பாமாயில் ஆகிய பொருட்களின் இருப்பு குறித்தும், மே மாதம் வழங்கப்பட வேண்டிய அந்தப் பொருட்கள் ஜூன் முதல் வாரத்துக்குள் வழங்கப்படும் என்றும் அறிவிப்பு வெளியிட்ட தமிழக அரசு, இன்றுவரை அந்தப் பொருட்கள் வழங்கப்படாத நிலையில், அதற்கான காரணம் என்ன? அட்டை தாரர்களுக்கு அந்தப் பொருட்கள் எப்போது வழங்கப்படும் என்பது குறித்து எந்த விளக்கத்தையும் கடந்த 18 நாட்களாக வெளியிடவில்லை. இதில் ஏதோ தவறு நடக்கிறது என்பதைத் தான் தமிழக அரசின் மௌனம் காட்டுகிறது.

தி. மு. க. ஆட்சிக்கு வந்தால், ஏற்கனவே நிறுத்தப்பட்ட உளுத்தம் பருப்பு மீண்டும் நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கப்படும் என்று தேர்தலின் போது தி. மு. க. வாக்குறுதி வழங்கியது. ஆனால், இன்று வரை அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இதனால் தமிழக மக்கள் அரசின் மீது கோபம் அடைந்துள்ளனர். இதை புரிந்து கொண்டு மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய பருப்பு உள்ளிட்ட பொருட்களை உடனே வழங்க தமிழக அரசின் பொதுவழங்கல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்- இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# அமித் ஷா கண்டித்தாரா?

## தமிழிசை விளக்கம்



சென்னை, ஜூன் 15

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிந்தைய பணிகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி கேட்பதற்காக தன்னை அமித் ஷா அழைத்ததாக தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்தார்.

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு பதவியேற்பு விழாவில் தமிழக பா. ஜ. க. முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் கலந்துகொண்டார். அவர் மேடையில் இருந்த தலைவர்களுக்கு மரியாதை அளித்தபடி சென்றபோது, உள்துறை அமைச்சர் அமித் ஷா, தமிழிசையை அழைத்து விரலை நீட்டியபடி ஏதோ கூற, அதற்கு தமிழிசை பதில் அளித்தார். இந்த வீடியோ வைரலானது. அந்த வீடியோவை பார்த்த பலரும், தமிழிசையை அமித் ஷா கண்டித்ததாக பதிவிட்டனர். இதனால் தமிழக பா. ஜ. கவிலும் சலசலப்பு ஏற்பட்டது.

இந்த விவகாரம் விவாதமாக எடுத்த நிலையில், தமிழிசை விளக்கமளித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

தேர்தலுக்குப் பிறகு முதல் முறையாக ஆந்திராவில் உள்துறை அமைச்சர் அமித் ஷாவை நான் சந்தித்தேன். அப்போது, தேர்தலுக்குப் பிந்தைய பணிகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி கேட்பதற்காக என்னை அழைத்தார். நான் விரிவாக கூறினேன். அப்போது, நேரமின்மை காரணமாக, மிகுந்த அக்கறையுடன் அரசியல் மற்றும் தொகுதி பணிகளைத் தீவிரமாகச் செய்யுமாறு அறிவுறுத்தினார். தேவையற்ற யூகங்கள் பரவுவதால் இந்த விளக்கத்தை அளிக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார் தமிழிசை.

(எ)

# நாம் தமிழர் வேட்பாளர் அறிவிப்பு



சென்னை, ஜூன் 15

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை அந்தக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார்.

ஜூலை 10 ஆம் திகதி தமிழ் நாட்டில் நடைபெறவிருக்கும் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பாக மருத்துவர் அபிநயா (இளங்கலை சித்த மருத்துவம்) போட்டியிடவிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சீமான் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதகமான பதில் கிடைக்காவிடில் மீண்டும் தொழிற்சங்க போராட்டம்!

## ரயில் நிலைய அதிபர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

**தங்கள் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காவிடின் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன போக்குவரத்து அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.**

ஒரே சேவைக் கட்டமைப்பில் உள்ளடங்கும் ஏனைய பிரிவுகளுக்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொண்டு ஐந்து வருடங்களுக்கும் மேலாக பதவி உயர்வு வழங்குவதில் ரயில் நிலைய அதிபர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அநீதிக்கு தீர்வு காணும் வகையில் ரயில் நிலைய அதிபர்களுக்கு ஐந்து வருடத்துக்கு ஒரு முறை பதவி உயர்வு வழங்கும் வழிமுறைகளுடன் ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கடந்த ஜனவரி முதலாம் திகதி எழுத்து மூலமாக சகல தரப்பினருக்கும் அறிவுறுத்தியுள்ளோம்.

ஆனால், பேச்சுவார்த்தையின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீது நம்பிக்கை வைத்து சேவையில் ஈடுபட்ட போதிலும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

ஆகவே, முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு உடன் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன், எமது கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காவிடின் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

மேலும், பேச்சுவார்த்தைகள் ஏதுவும் இல்லாமல் பொதுப் பயணிகளை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வகையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன-என்றார். (அ)

# வறிய மாணவர்களின் புலமைப்பரிசில் திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 15

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்காக ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே கல்வி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதலாம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் ஒரு இலட்சம் மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அந்தவகையில் மேல் மாகாணத்திற்கு 16,152 புலமைப்பரிசில்களும், வடமாகாணத்திற்கு 8,636 புலமைப்பரிசில்களும், ஏனைய மாகாணங்களுக்கு 10,000 புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், ஒரு மாதத்திற்கு ரூ.3,000 வீதம் 12 மாதங்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை க.பொ.த உயர்தரம் கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு மாதம் 6,000 ரூபாய் வீதம் 24 மாதங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் பணிகள் தற்போது நிறைவு பெற்றுள்ளன.

அந்தவகையில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 2000 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது-என்றார். (அ)

# அரசியல் குழுக்கள் மீண்டும் வன்முறையில் ஈடுபடலாம்!

## முன்னாள் பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, ஜூன் 15

கடந்த காலங்களில் வன்முறை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசியல் குழுக்கள் மீண்டும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாது என நம்ப முடியாது என முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் கலந்து கொண்ட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்குப் பின்னர் அரசாங்கம் பெரும் புனர்வாழ்வை மேற்கொண்டதுடன் கிளர்ச்சி இத்துடன் முடிவடையும் என அனைவரும் நினைத்தோம்.

ஆனால் துரதிஷ்டவசமாக 1989 இல் மீண்டும் இந்த வன்முறைச் இலங்கையில் இடம்பெற்று உடமைகளும் உயிர்களும் அழிக்கப்பட்டன. அதன் பின்னரும் துரதிர்ஷ்டவசமாக, 2022 ஆம் ஆண்டு மே 9 அன்று 91 வீடுகளை அழிக்கும் அளவுக்கு ஒரு குழு உருவானதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே இதுபோன்ற செயல்களைச் செய்யும்போது, எதிர்காலத்தில் இதைச் செய்ய மாட்டார்கள் என என்ன நிச்சயம் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (அ)

# நாட்டை பலவீனப்படுத்தாதீர்!

## ஷெஹான் சேமசிங்க எதிர்க்கட்சிக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

பொருளாதாரத்தின் மீது சர்வதேசமும், நாட்டு மக்களும் நம்பிக்கை கொண்டுள்ள நிலையில், நாட்டை பலவீனப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அனுமதி குறித்து கருத்து தெரிவிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனை கூறினார்.

2022 ஆம் ஆண்டு காணப்பட்ட சமூக கட்டமைப்புக்கும் தற்போதைய நிலவரத்துக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றதாகவும்



பொருளாதார மீட்சிக்காக முன்னெடுத்த தீர்மானங்களினால் நாட்டு மக்கள் குறுகிய கால நெருக்கடிகளை எதிர்கொண்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் முன்வைத்த கடுமையான நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொண்ட பின்னரே மூன்றாம் தவணை விடுவிக்கப்பட்டதாக எதிர்க்கட்சி கூறுவது அடிப்படையற்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு தவணைக்கும் புதிதாக நிபந்தனைகள் விதிப்பதில்லை எனவும் கடன் சமநிலை மற்றும் வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட காரணிகளை முன்னிலைப்படுத்தி சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன் அந்த செயற்திட்டங்களை ஒருபோதும் மாற்றியமைக்க போவதில்லை எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

மேலும், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக போலியான வாக்குறுதிகளை தாங்கள் வழங்கப் போவதில்லை எனவும் அவர் கூறினார். (அ)

# 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் பாதாளக் குழுக்கள் அழிப்பு!

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

**2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களை முற்றாக ஒழிப்பதாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.**

பத்தரமுல்ல சுஹுருபாய கட்டிடத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அதன்படி, 2023 டிசெம்பர் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யுக்திய நடவடிக்கை நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த செயற்பாட்டின் மூலம், இதுவரை நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என 138,116 பேரும், பட்டியலிடப்பட்ட குற்றக்கும்பலைச் சேர்ந்த 965 உறுப்பினர்களுள் 703 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் ஆயுதப் படையினரின் ஒத்துழைப்புடன்



2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகம் நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதற்காக, இலங்கைப் பொலிஸார் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் சிலரைத் தவிர இந்நாட்டின் பெரும்பாலான பொதுமக்கள் இலங்கை பொலிஸார் மீது அதீத நம்பிக்கை வைத்துள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மோசடி பெண் கைது!

கொழும்பு, ஜூன் 15

இஸ்ரேலில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை ஏமாற்றிய பெண்ணொருவரை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

ஹொரணை, பல்லாபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த ஒருவர், கதிர்காமம், கோதமிகம பிரதேசத்தில் வசிக்கும் பெண் ஒருவரிடமிருந்து 1,689,000 ரூபா பணம் பெற்றதாக பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதன்படி, குறித்த பெண்ணை பணியகத்துக்கு அழைத்து வாக்குமூலம் பதிவு செய்த பின்னர், குறித்த சந்தேக நபர் பணியக சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தலங்கம பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் ஹொரணை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இரு நாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலையீட்டின் ஊடாகவே இலங்கையர்களுக்கு இஸ்ரேலிய வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. இதன்படி, அந்த விடயத்தில் வெளியாட்கள் எவரும் தலையிட முடியாது எனவும், வேலை வழங்க முடியும் எனக் கூறும் நபர்கள் தொடர்பில் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவிற்கு அறிவிக்குமாறு பணியகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்காக தமிழரை நாங்கள் ஏமாற்றவில்லை

## கூறுகிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 15

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தோல்வி கண்ட பொறிமுறையாக இருந்தபோதிலும் மாற்று தீர்வை முன் வைக்காமல் அதனை நீக்க முடியாது. அவ்வாறு நீக்க முற் பட்டால் அது வேறு பிரச்சினைக்கு வழிவகுக்கக்கூடும் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பின ரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

அத்துடன், அரசியலுக்காக தமிழ் மக்களை ஏமாற்ற வேண் டிய எந்தவொரு தேவைப்பா டும் தேசிய மக்கள் சக்திக்கு கிடையாது எனவும் அவர் கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் மூலம் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுவந்துள்ளனர். இவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நடத்துவ தற்கு தேசிய மக்கள் சக்தி தயா ரில்லை. எனவே, இந்த நாட்டை மாற்றுவதற்காக அனைத்து இன மக்களையும் அரவணைத் துக்கொண்டு புதியதொரு திசையை நோக்கி நகரவேண் டும்.

13 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக பிரச்னைகள் தீரவில்லை. அது தோல்வி கண்டதொரு பொறிமுறையாகும். நானும் மாகாண சபையில் அங்கம் வகித்துள்ளேன். தீர்வுக்கு பதி லாக அதன் மூலம் நிர்வாக பொறிமுறையில் பிரச்னைகள் வந்துள்ளன.

13 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் நிறைவேறாதபோதி லும், அது வெள்ளை யானை யாக கருதப்பட்டாலும் தற் போது வடக்கு, கிழக்கு மக்கள் 13 என்பது தாம் வென்றெடுத்த உரிமையாகவே கருதுகின்றனர். எனவே, இதற்கு மாற்றுத் தீர்வை வழங்காமல் ஒரேடியாக 13 ஐ நீக்கினால் அது வேறு பிரச்னைக்கு வழிவகுக்கும்.

13 ஆவது திருத்தச்சட்டம் தற்போதுள்ளவாறு அமுலாக் கப்படும். பொருளாதாரப் பிரச் னைக்கு தீர்வு கண்ட பின்னர், அதனை குறுகிய காலப்பகுதிக் குள் செய்ய முடியும். புதிய அர சமைப்பு கொண்டுவரப்படும். அதன்மூலம் அனைத்து இன மக்களினதும் உரிமைகள் உறு திப்படுத்தப்படும். அனைவரும் சம உரிமை பெற்ற சமூகமாக வாழ முடியும்-என்றார். (அ)

# மக்களின் தீர்மானத்திலேயே நாட்டின் எதிர்காலம் உள்ளது

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது



கொழும்பு, ஜூன் 15

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங் கள் சரியான முறையில் முன் னெடுக்கப்படுவதன் காரணமா கவே சர்வதேச நாணய நிதியத் தின் மூன்றாம் கட்ட நிதி உதவிக் கான அனுமதி வழங்கப்பட்டுள் ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் ஆசு மாரசிங்க தெரிவித் தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் கட்டமாக 336 மில்லியன் டொலர் நிதி உதவிக்கான அனு மதி வழங்கப்பட்டிருக்கிறது.

நாணய நிதியத்தின் நிபந்த னைகளுக்கு அமைய அரசாங் கம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான வேலைத்திட் டத்தை முறையாக மேற்கொண்டு அதன் இலக்கை அடைந்திருக்கி றது.

அதேபோன்று நாணய நிதி யத்தின் நிபந்தனைகளுக்க அமைய நாட்டின் மொத்த உற் பத்தி அதிகரித்துள்ளது. பண வீக்கம் குறைவடைந்துள்ளது.

அதேபோன்று வெளிநாட்டு செலாவணி கையிருப்பு அதிக ரித்து வருவதால், ரூபாவின் பெருமதி அதிகரித்து வருகிறது.

அதன் பிரகாரம் பொருட்க ளின் விலை இருந்ததைவிட குறைவடைந்துள்ளது. மேலும் இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற இருக்கிறது.

இந்த தேர்தலில் மக்கள் எடுக் கும் தீர்மானத்திலேயே நாட் டின் எதிர்காலம் தங்கியுள்ளது-என்றார். (அ)

# ரஷ்ய இராணுவத்தில் இலங்கையர்கள் ஆராய மொஸ்கோ விரைகின்றது குழு

கொழும்பு, ஜூன் 15

ரஷ்ய இராணுவ சேவையில் இணைந்துகொண்ட இலங்கை யர்கள் நாடு திரும்புவது தொடர் பில் கலந்துரையாடுவதற்காக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உள்ளிட்ட அமைச்சின் அதிகா ரிகள் குழுவொன்று எதிர்வரும் 26 ஆம் திகதி ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளது.

இந்தக் குழுவினர் சில நாட் கள் ரஷ்யாவில் தங்கவுள்ளது டன், அந்த நாட்களில் உரிய அதிகாரிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு தேவை யான இராஜதந்திர பேச்சுவார்த் தைகளை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இலங்கையர்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரஷ்ய இராணுவத்தில் இணைந் துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவித் துள்ளன.அதன்படி, சுமார் 600 பேர் இணைந்துள்ளதாகவும், அவர்களில் சிலர் நாட்டுக்கு வர விரும்பவில்லை எனவும் தெரி விக்கப்படுகின்றது.

இதனிடையே, வெளிவிவ கார அமைச்சர் அலி சப்ரி சில நாட்களுக்கு முன்னதாக ரஷ்யா வுக்குச் சென்ற நிலையில், இந்த விடயம் தொடர்பில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சரு னும் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணில் முகத்தில் தோல்விப் பயம்!

## அதனாலேயே பதவி காலத்தை நீடிக்க முற்படுகிறார் என்கிறார் முஜிபுர்

கொழும்பு, ஜூன் 15

தேர்தலொன்றை சந்தித்தால் நிச்சயம் தோல்வி பெறுவார் என ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவுக்கு தெரியும். தோல்வி பயத்தை அவரது முகமே காட் டிக்கொடுப்பதாக நாடாளு மன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பக்கம் நிற்கும் சிலர் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக் கும் யோசனையை முன்வைத் துள்ளனர். ஐக்கிய தேசியக் கட் சியின் செயலாளர் மற்றும் தவி சாளர் உட்பட பலர் அந்த யோச னையை ஊக்குவிக்கின்றனர்.

இந்த கருத்து ஒரு பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியன் பின் னர் ரணில் விக்ரமசிங்க கூறு கின்றார், தேர்தல் நிச்சயம் நடை பெறும் என்று.

இவற்றிலிருந்து எங்களுக்கு தெளிவாக ஒன்று புரிகின்றது. ஜனாதிபதி மற்றும் ராஜபக்சர் கள் இணைந்து உருவாக்கியுள்ள இந்த அரசாங்கத்திற்கும் மக்க ளுக்கும் ஒரு முரண்பாடு காணப் படுகின்றது.

தேர்தலை ஒன்றை சந்தித்தால் ஏற்படும் தோல்வி பயத்தை அவரின் முகம் காட்டிக்கொடுக் கின்றது. இவற்றிலிருந்து எதிர் வரும் தேர்தலில் அவர்கள் நிச்ச யம் தோல்வி பெறுவார்கள் என் பது தெளிவாகின்றது.

இந்த தோல்வியை அறிந்தே அவர்கள் தேர்தல் காலத்தை நீடிப்பதற்கான வழிமுறைகளை தேடுகின்றனர். அதற்காக தற் போது ஜனாதிபதி ரணில் விக்ர மசிங்க பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறார்.

ஜனாதிபதிக்காக அரசாங் கம் சமர்ப்பித்துள்ள மதிப்பீடு கள் ஜனாதிபதித் தேர்தல் நடவ டிக்கைகளுக்காக செலவிடப்ப டுகிறதா என்பதை தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய வேண்டும். 8,750 மில்லியன் ரூபா ஜனா திபதி தேர்தலுக்கு ஒதுக்கப்பட் டுள்ள நிலையில் அதனை எந்த வொரு நிதியிலிருந்தும் பெற் றுக்கொள்ள முடியும்.-என்றார். (அ)

# மொட்டு எம்.பி வாகனம் மீது துப்பாக்கிச்சூடு ஒரு நாடகம்!

## எம்.பியும், பொலிஸ் அதிகாரியும் வெளிநாடு பறந்தனர்




கொழும்பு, ஜூன் 15

பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்ட முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடிகர் உத்திக பிரேமரத்னவின் வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்ட சம்பவத்துடன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்த ரணி நிஹால் தல்துவ தெரிவித் தார்.

உதவிப் பொலிஸ் அத்தியட் சகர் ஒருவருடன் இணைந்து திட்டமிட்ட வகையில் இந்த துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலை பாராளுமன்ற உறுப்பினர் மேற் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் வாக னம் மீது 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுத் தாக் குதல் நடத்தப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டில் காரின் பக்கவாட்டுக் கண்ணாடி சேதம டைந்தது. ஆனால் எம்.பி.க்கு காயம் ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசார ணைகளை மேற்கொண்டனர்.

சம்பவத்துடன் தொடர்பு டைய சந்தேக நபர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக் ளம் தெரிவித்துள்ளது.

சஞ்சீவ மஹாநாம என்ற சந்தேகத்திற்குரிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வெளி நாடு சென்றுள்ளதாகவும், பொலி ஸாருக்கு அறிவித்து முறையான அனுமதி பெற்று வெளிநாடு செல்லவில்லை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட் டார்.

இது தொடர்பில் தனியான விசாரணை நடத்தப்படும் என வும் தல்துவ குறிப்பிட்டார்.

உதவிப் பொலிஸ் அத்தியட் சகரும் பாராளுமன்ற உறுப்பின ரும் நன்கு அறியப்பட்டவர்கள் என்பதாலேயே இந்தத் தாக்கு தல் திட்டமிடப்பட்டதாகத் தோன்றுவதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் தெரிவித்தார்.

விசாரணையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் மனைவி மற்றும் பிள்ளைகள் வெளிநாடு சென்றுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கட்டு நாயக்க விமான நிலையத்துக் குச் சென்று தனது துப்பாக்கியை பணியிடத்துக்கு யாரோ ஒருவ ரின் மூலமாக அனுப்பியதாக தகவல் வெளியாகியுள்ளதாகத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், இது தொடர்பிலும் விசாரணை நடத்தப்படும் என்றார்.

உதவி பொலிஸ் அத்தியட்ச கர் நேற்று முன்தினம் மலேசியா வுக்கு சென்றுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித் தார்.

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தனது பாராளுமன்ற உறுப்பினர் பத வியை கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி இராஜினாமா செய்தார். பதவியை ராஜினாமா செய்து விட்டு அவர் கனடா சென்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அநுர ஜனாதிபதியானாலும் இலங்கை நிலைமை மாறாது

## கூறுகிறார் விஜித ஹேரத்



கொழும்பு, ஜூன் 15

**தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியானாலும் இலங்கைத் தீவின் தற்போதைய நிலைமையை மாற்றியமைக்க முடியாது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

பொருளாதாரம் மீண்டெழ சிறிது காலம் எடுக்கும் என கூறிய அவர், வீட்டு பொருளாதாரத்தை உரியமுறையில் நிர்வகிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி செயலிழந்துவிட்டது. பெரமுனவையும் அவ்வாறே கருதுகிறோம். எல்லோராலும் முடியாது என்றால், அவர்களால் அதைச் செய்ய முடியாது.

அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியானால் விஸ்வகர்மாவின் பலத்தினாலும் மந்திர சக்தியினாலும் நாட்டின் தற்போதைய நிலைமையை மாற்றுவதற்கு வழியில்லை.

பால் தேநீருக்குப் பதிலாக தேநீர் குடித்து தேவையற்ற செலவுகளைக் குறைத்து வீட்டுப் பொருளாதாரத்தை கவனமாக நிர்வகிப்பது போன்றாவது நாம் கடின அர்ப்பணிப்புடன் பொருளாதாரத்தை மீட்டெடுக்க பாடுபடுவோம்- என்றார். (அ)

போதைப்பொருள் கடத்தல்

# பாகிஸ்தான், ஈரான் நாட்டு பிரஜைகளுக்கு ஆயுள் சிறை

கொழும்பு, ஜூன் 15

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் ஏழு பாகிஸ்தான் மற்றும் ஈரானிய பிரஜைகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே இந்த தீர்ப்பை வழங்கினார்.

2022ஆம் ஆண்டு கடற்படையினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில், இலங்கை கடற்பரப்பிற்குள் 123 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பாகிஸ்தான் மற்றும் ஈரான் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து, சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், குற்றவாளிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கையினை கருத்தில் கொண்டு, தண்டனையை அனுபவிக்கும் வகையில் அந்தந்த நாட்டுக்கு நாடு கடத்தப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# முட்டை விலை உயர்வு

கொழும்பு, ஜூன் 15

சந்தையில் முட்டை விலை மீண்டும் அதிகரித்துள்ளது என இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி முட்டை ஒன்றின் விலை 55 - 60 ரூபாய் வரை அதிகரித்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிவப்பு முட்டை ஒன்றின் விலை 50 ரூபாவாகவும், வெள்ளை முட்டை ஒன்றின் விலை 49 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

சந்தைக்கு அதிகளவு முட்டை உற்பத்தி வருவதால் முட்டையின் விலை மேலும் குறையும் என இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இவ்வாறான பின்னணியில் மீண்டும் முட்டையின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 15

அரச புலனாய்வு சேவையின் தகவலுக்கமைய கேரள கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் 2 கிலோ 300 கிராம் கேரள கஞ்சாவுடன் மந்திகை பகுதியில் வைத்து நெல்லியடி பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபடும் குறித்த நபர் தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்த அரச புலனாய்வு பிரிவினர், கடந்த வியாழக்கிழமை விற்பனை நோக்கத்திற்காகக் கஞ்சாவைக் கொண்டு செல்லும் போது சந்தேக நபரை கைது செய்தனர். (அ)

# பொது வாக்கெடுப்பு தொடர்பில் பத்தரமுல்லையில் சந்திப்புகள்!

கொழும்பு, ஜூன் 15

பொது வாக்கெடுப்பொன்றை நடத்துவது தொடர்பில் பல சுற்று கலந்துரையாடல்கள் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வருவதாக அரசாங்கத்தின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பத்தரமுல்லையில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற இரண்டு கலந்துரையாடல்களில், ஜே.ஆர். ஜெயவர்தன நடத்திய முறையில் பொது வாக்கெடுப்பை நடத்துவது குறித்து சட்ட நிபுணர்களிடம் கருத்து கோரப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் ஊடாக இதற்கு தடைகள் ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய மாற்று வழிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு நடத்துவதற்கு இரண்டு சாத்தியங்கள் இருப்பதாக சட்ட நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நாட்டின் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு பிரச்னையையும் ஜனாதிபதி குறிப்பிட முடியும் எனவும் அல்லது பாராளுமன்றத்தில் சட்டமொன்றை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

அந்தச் சட்டமூலத்தை உயர் நீதிமன்றம் நிராகரித்தால் அதனை பொது வாக்கெடுப்புக்கு விட முடியும் எனவும் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை மாதம் இதுதொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்த சில கலந்துரையாடல்களை நடத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அறிய முடிகிறது.

கடந்த சில நாட்களாக ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடகாலத்துக்கு அதிகரிக்க அரசியலமைப்பில் அதிகாரம் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்து வருகிறது.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதால் இத்தருணத்தில் தேர்தலை நடத்துவது பாதகமாக அமையும் என்பதால் ஸ்திரமான பொருளாதார நிலைமைகள் ஏற்பட்ட உடன் தேர்தலை நடத்துவது பொருத்தமானதாக இருக்கும் எனவும் ஐ.தே.க வலியுறுத்தியுள்ளது. (அ)

# பல்கலை கல்விசாரா ஊழியருக்கு சம்பள உயர்வு சாத்தியம் இல்லை

கொழும்பு, ஜூன் 15

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு இந்த வருடம் சம்பள உயர்வை வழங்க முடியாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த தீர்மானம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் எழுத்து மூலம் தமக்கு அறிவிக்கப்பட்டதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அனைத்து பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கும் அறிவிக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்கத்தின் தீர்மானம் தொடர்பில் கல்விசாரா தொழிற்சங்கங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடலுக்கு அழைக்கப்படும் என பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிப்பகிஷ்கரிப்பு நேற்று வெள்ளிக்கிழமை 44 ஆவது நாளாக தொடர்ந்தது.

தொடரும் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. (அ)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆபத்தான குளவிக்கூடு அகற்றம்

கிளிநொச்சி, ஜூன் 15

பாடசாலை வளாகத்தில் ஆபத்தை ஏற்படுத்திய குளவி கூடு வனஜீவராசிகள் திணைக்களத்தினால் நேற்று முன் தினம் அகற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்த குளவிக்கூடு கலைந்ததில் 35 மாணவர்களும், 4 ஆசிரியர்களும் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், கற்றல் செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டு பாதுகாப்புக்காக வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்நிலையில் ஆபத்தை ஏற்படுத்திய குளவிக்கூடு வனஜீவராசிகள் திணைக்களத்தினால் அகற்றப்பட்டது.

இதனை அடுத்து மத்திய கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார். (அ)

# வாகன இறக்குமதி கட்டுப்பாடு; இன்று இறுதித் தீர்மானம் வரும்

கொழும்பு, ஜூன் 15

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான திட்டத்தை இன்றைய தினத்திற்குள் இலங்கை, இறுதி செய்யவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் 3ஆம் காலாண்டிற்குள் பொதுப் போக்குவரத்து மற்றும் விசேட நோக்கங்களுக்கான வாகனங்களின் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த ஆண்டின் 4ஆம் காலாண்டிற்குள் சரக்கு போக்குவரத்திற்கான வாகனங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

2025ஆம் ஆண்டில் அனைத்துவித வாகனங்களுக்குமான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதிய அறிக்கை தெரிவிக்கின்றது. (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ துறைக்கு தெரிவான மாணவன் நீரில் மூழ்கிப் பலி!

## பெரும் சோகத்தில் காரைதீவு

காரைதீவு, ஜுன் 15

**மருத்துவத் துறைக்குத் தெரிவான அம்பாறை காரைதீவைச் சேர்ந்த சிவகரன் அக்சயன் (வயது- 20) என்ற மாணவன் நேற்று வெள்ளிக்கிழமை காலை நீரில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தத் துயரச் சம்பவம் அப்பகுதி மக்கள் மத் தியில் பெரும் சோகத்தை ஏற் படுத்தியுள்ளது.**



மரணமடைந்த மாணவன் அக்சயன் அந்தக் குடும்பத்தின் ஒரேயொரு பிள்ளையாவார். காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் இம்முறை மருத்துவத் துறைக்குத் தெரிவான இரண்டு மாணவர்களில் அக்சயனும் ஒருவராவார்.

இவர் அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து மாவட்டத்தில் 23 ஆவது இடம் வந்து மருத்துவத் துறைக்குத் தெரிவாகியிருந்தார்.

அவர் தனது குடும்பத்தோடு மூன்று நாட்களுக்கு முன்பு உகந்தமலை முருகன் ஆலயத்துக்குச் சென்று அங்கு தரித்து விட்டு நேற்று வெள்ளிக்கிழமை காலை வரும்பொழுது பொத்துவில் மற்றும் லாகுகலைக்கிடையிலுள்ள நீலகிரி ஆற்றிலே நீராடியபோது மூழ்கி உயிரிழந்தார்.

மாணவனின் சடலம் மேலதிக விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக லாகுகலை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)



# கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக நௌபீஸ்

கல்முனை, ஜுன் 15

அம்பாறை கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளராக என். எம். நௌபீஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண முகாமைத்துவத் திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றி வரும் நௌபீஸ், கல்முனை மாநகர சபை ஆணையாளராக நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கல்முனை மாநகர ஆணையாளராக இருந்த ஏ. எல். எம். அஸ்மி, கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) பதவி உயர்வு பெற்றுச் சென்றதையடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண முகாமைத்துவத் திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக ஆணையாளர் பதவியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கினார். (எ)

# மனைப் பொருளாதாரத்தை ஊக்குவிக்க சிறப்பு திட்டம்

ஒலுவில், ஜுன் 15

தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் மனைப் பொருளாதார அபிவிருத்தி ஆகிய வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகளில் மனைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் விவசாயத் திணைக்களத்தின் மூலம் பல்வேறு வேலைத் திட்டங்கள் நாடு தழுவிய ரீதியிலுள்ள கிராம மட்டங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, ஒலுவில் நுஜா மகளிர் விவசாய விரிவாக்கல் அமைப்பின் மூலம் மனைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் "கை வினைப் பொருட்கள் தயாரிக்கும் விஷேட பயிற்சிகள்" ஒலுவில் பிரதேசத்தில் இடம்பெற்றன.

அந்த அமைப்பின் தலைவி ஏ. எல். நயிமா தலைமையில் இடம்பெற்ற இந்த பயிற்சிகளின்போது அம்பாறை விவசாய விரிவாக்கல் பயிற்சிப் பிரிவின் வளவாளர் எஸ். ஜீவிதா, வளவாளராகக் கலந்து கொண்டு இல்லத் தலைவிகளுக்கும் யுவதிகளுக்குமான பயிற்சிகளை வழங்கினார்.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகளில் இலகுவில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு காலத்துக்கு ஏற்ற வகையில் அனைவரும் விரும்பி உண்ணும் உணவுப் பண்டங்களை குறைந்த செலவில் சுகாதார முறையில் உற்பத்தி செய்யும் பயிற்சிகள் பல வழங்கப்பட்டன.

வீடுகளில் இருந்தவாறு போஷாக்கான உணவு உற்பத்தியை மேற்கொள்வதோடு, வாழ்க்கைச் செலவைக் குறைத்து நச்சுப் பொருளற்ற சுற்றாடல் நேயம் மிக்க உணவு உற்பத்தியின் பால் மக்களை வழிப்படுத்தும் இந்தச் செயல்திட்டத்தின் கீழ் ஒலுவில் பிரதேச மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் இந்தத் திட்டத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர். (எ)



# ரணிலின் அரசாங்கத்துக்கு 14 நாட்கள் கால அவகாசம்

ஏறாவூர், ஜுன் 15

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசாங்கத்துக்கு 14 நாட்கள் கால அவகாசத்தை வழங்கியிருக்கின்றோம். எனவே, ஜனாதிபதி உடனடியாக எமது பிரச்னைக்குத் தீர்வு வழங்காவிட்டால் எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கையிலுள்ள அநேகமான அதிபர், ஆசிரியர்களை கொழும்புக்கு வரவழைத்து நாங்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபடுவோம் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சு. பிரதீப் தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

12 ஆம் திகதி இலங்கை வரலாற்றிலே 101 கல்வி வலயங்களிலும் மிகவும் வெற்றிகரமாக அதிபர், ஆசிரியர்களின் சம்பள போராட்டத்தின் அடுத்த கட்டநகர்வு மிக வெற்றிகரமாக ஏற்படுத்தப்பட்டது.

கடந்த 27 வருடங்களாக அதிபர், ஆசிரியர்களுடைய சம்பள முரண்பாடு தீர்க்கப்படாமல் இருந்தது. நாங்கள் 2001 ஆம் ஆண்டு பெரும் போராட்டத்தின் மூலமாக மூன்றில் ஒரு பகுதி சம்பளத்தை 2022 ஆம் ஆண்டு பெற்றோம். அதற்குப் பின்பு 2023, 2024 வரவு - செலவுத் திட்டத்தில் ஆசிரியர், அதிபர்களுடைய சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் என்று கல்வி அமைச்சும் அதுபோல நிதி அமைச்சும் பல பொய்களை கூறியபோதும் எவ்வித நிதி ஒதுக்கீடும் வழங்கப்படவில்லை.

நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம். பார்த்துக் கொண்டிருந்தோம். அதிபர், ஆசிரியர்களுடைய சம்பள உயர்வை இந்த அரசாங்கம் வழங்கும் என்று. ஆனால், இறுதியில் ஏமாற்றமே கிடைத்தது. பல போராட்டங்களை 2023 ஆம் ஆண்டு செய்திருந்தோம். அந்த ஜனநாயக நியாயமான போராட்டம் மீது ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் தடியடி கொண்டும் தண்ணீர் தாக்குதலும் ஆசிரியர், அதிபர்கள் மீது மேற்கொண்டார்கள். நாங்கள் பின்னோக்கி செல்லவில்லை ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு நாங்கள் ஒரு எச்சரிக்கையை கொடுத்திருக்கின்றோம். நாங்கள் மீண்டும் நமது போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

விசேடமாக போராட்டம் வடக்கில் 13 வலயங்களிலும் அதேபோன்று கிழக்கில் அனைத்து வலயங்களிலும் விசேடமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 கல்வி வலயங்களிலும் அதிபர், ஆசிரியர்கள் போராட்டத்தை நடத்தியிருக்கின்றார்கள்.

நாங்கள் ரணில் அரசாங்கத்துக்கு ஒரு செய்தியை கூறுகின்றோம். இனிவரும் காலங்களில் அதிபர், ஆசிரியர்களின் போராட்டங்கள் வடக்கு - கிழக்கில் பெரும் முனைப்புடன் வெடிக்கும் என்கின்ற எச்சரிக்கையை கொடுக்கின்றோம்.

எனவே, நாங்கள் இன்னும் அவர்களுக்கு 14 நாட்கள் கால அவகாசத்தை வழங்கியிருக்கின்றோம். ஜனாதிபதி உடனடியாக எமது பிரச்னைக்குத் தீர்வு வழங்காவிட்டால் எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கையிலுள்ள அநேகமான அதிபர், ஆசிரியர்களை கொழும்புக்கு வரவழைத்து நாங்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபடுவோம்- என்றார். (எ)

# "தமிழர்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும்"

கல்முனை, ஜுன் 15

"கிழக்கை மீட்போம்" என்ற போர்வையில் மட்டக்களப்பில் வீதி அபிவிருத்தி தரகுப் பணத்தில் அள்ளிய பல கோடிகளை கொண்டு பாதைகளையும் போதைகளையும் காட்டி, அம்பாறை மாவட்ட தமிழர்களை ஏமாற்ற நினைக்கும் சக்திகளிடம் விலை போகாது தமிழ் மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் ரணில் 2024 செயலணி தலைவர் க. மோகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,


கிழக்கில் தனித்து தமிழர்கள் ஆள முடியாது என்று தெரிந்திருந்தும், தனித்து கிழக்கை வலியுறுத்தும் பிரித்தாளும் சக்திகள் அபிவிருத்தி என்ற போர்வையில் அம்பாறை மாவட்ட தமிழர்களை ஏமாற்றி வருகின்றனர். இது மக்களின் வாக்குகளை கொள்ளையடித்து தமது சுயலாப இருப்புக்காக தமிழர்களை அங்கு பூரணமாக இல்லாமல் செய்யும் நடவடிக்கையாகும்.

"கிழக்கை மீட்போம்" என தெரிவித்துக்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல ஏக்கர் அரச காணிகளை தனது பினாமிகள் பெயரில் அபகரித்து வருவதுடன் வீதி நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தகாரரிடம் 10 வீதம் பணத்தை பெற்றுக்கொண்டு பல கோடி பணத்தை கொள்ளையடித்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பத்து ஆண்டுகளுக்கு பாதுகாப்பு ஒப்பந்தம்

## அமெரிக்கா - உக்ரைன் தலைவர்கள் கையொப்பம்




ரோம், ஜூன் 15

**அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இரு தரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பாக பேச்சுகள் நடத்தினார். இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையே 10 ஆண்டுகளுக்கு பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.**

எதிர்காலத்தில் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தினால் அமெரிக்காவும், உக்ரைனும் 24 மணி நேரத்துக்குள் உயர்மட்ட அளவில் ஆலோசனை நடத்தி முடிவு எடுக்க வேண்டும் என புதிய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, கனடா, ஜப்பான் ஆகிய முன்னேறிய நாடுகள் கொண்ட ஜி 7 அமைப்பின் உச்சி மாநாடு இத்தாலியில் தொடங்கியது. மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் பங்கேற்றார். இதன்போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, அடுத்த 10 ஆண்டுகளுக்கு உக்ரைனுக்கு பல்வேறு வகையில் இராணுவ உதவி மற்றும் இராணுவப் பயிற்சியை அமெரிக்கா வழங்கும்.

ரஷ்யாவின் படையெடுப்புக்கு எதிராகப் போராடி வரும் உக்ரைனுக்கு இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் வரலாற்று சிறப்பு வாய்ந்தது என ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார். அத்துடன், நேட்டோ அமைப்பில் இணைவதற்கான முயற்சியில் தனது நாட்டுக்கு இது ஒரு பாலமாக செயல்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

உக்ரைனின் இராணுவத்தை சிறப்பாக கட்டமைக்கவும், பயிற்சியில் ஒத்துழைக்கவும் உக்ரைனின் உள்நாட்டு ஆயுத தொழிற்சாலையை உருவாக்கவும் இந்த ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, ஜி 7 மாநாட்டின் இடையே, உக்ரைனுடன் ஜப்பானும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துள்ளது. (எ)

# ஹஜ் யாத்திரை பணிகளால் மாநாட்டுக்கு வர முடியாது

## சவுதி அரேபியா இளவரசர்



ரியாத், ஜூன் 15

ஹஜ் யாத்திரை பணிகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால் இத்தாலியில் நடைபெறும் ஜி 7 மாநாட்டில் பங்கேற்க முடியவில்லை என்று சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும், பிரதமருமான முகமது பின் சல்மான் அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜி 7 மாநாட்டை இத்தாலி தலைமை தாங்கி நடத்துகிறது.

இந்த மாநாட்டில் பங்கேற்க இந்தியா உட்பட 12 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனிக்கு சவுதி இளவரசர் எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, ஜி 7 மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுத்ததற்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார். (எ)

# குவைத் தீ விபத்துக்கு மின் கசிவே காரணம்

குவைத் சிற்றி, ஜூன் 15

49 பேரின் உயிரைக் காவு வாங்கிய குவைத் தீ விபத்துக்கு மின் கசிவே காரணம் என்று தீயணைப்புத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.

அடுக்குமாடி குடியிருப்பில் சமையல் செய்தபோது ஏற்பட்ட தீ விபத்துதான் இந்தத் துயர சம்பவத்துக்கு காரணம் என முதலில் தெரிவிக்கப்பட்டது.

குவைத் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 45 இந்தியர்கள் உட்பட 49 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். (எ)

# செங்கடலில் கப்பல்மீது வெடிகுண்டு தாக்குதல்

## ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அட்டூழியம்

ஏமன், ஜூன் 15

செங்கடலில் கிரீஸ் சரக்கு கப்பல் மீது ஹவுதி கிளர்ச் சியாளர்கள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தி அட்டூழியத் தில் ஈடுபட்டனர்.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேல் மற்றும் அந்த நாட்டுடன் தொடர்புடைய சரக்கு கப்பல்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் 9 மாதங்களாகத் தொடர்ந்து வருகிறது. இந்தப் போரில் ஹமாஸுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் ஏமனை சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் வழியாக செல்லும் இஸ்ரேல் மற்றும் அந்த நாட்டுடன் தொடர்புடைய சரக்கு கப்பல்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் ஏமன் நாட்டுக்கு அருகே செங்கடலில் சென்று கொண்டிருந்த கிரீஸ் நாட்டுக்குச் சொந்தமான சரக்கு கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட ஆளில்லா படகை சரக்கு கப்பல் மீது மோதி இவ்வாறு தாக்குதல் நடத்தினர். (எ)

# எண்ணெய் ஆலையில் பயங்கர தீ



பக்தாத், ஜூன் 15

ஈராக்கில் எண்ணெய் ஆலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஈராக்கின் வடக்கு பிராந்தியமான எர்பில் நகரில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்று செயல்படுகிறது. தனியாருக்குச் சொந்தமான இந்த ஆலை வழக்கம்போல் இயங்கியது. அப்போது அந்த ஆலையின் கொதிகலன் திடீரென வெடித்து சிதறியது. இதனால், ஏற்பட்ட தீ மளமளவென ஏனைய பகுதிகளுக்கும் வேகமாக பரவியது. எனவே, அந்த பகுதி முழுவதும் கரும் புகை மண்டலமாக காட்சியளித்தது. (எ)

# ஜி 7 மாநாட்டில் பங்கேற்க இத்தாலி சென்றார் மோடி

ரோம், ஜூன் 15

ஜி 7 மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இத்தாலி சென்றுள்ளார்.


3 ஆவது முறையாக பிரதமராக பதவியேற்ற பிறகு மோடி செல்லும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, கனடா, ஜப்பான் ஆகிய முன்னேறிய நாடுகள், ஜி - 7 என்ற அமைப்பாக செயல்படுகின்றன. ஆண்டுதோறும் இந்த அமைப்பின் மாநாடு நடப்பது வழக்கம்.

தலைமை பொறுப்பு வகிக்கும் நாடு, பிற நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்களையும் மாநாட்டுக்கு அழைப்பது வழக்கம். இந்த ஆண்டு தலைமை பொறுப்பை ஏற்று மாநாட்டை நடத்தும் இத்தாலி, இந்தியா உட்பட 12 வளரும் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.



# தாய்வான் எல்லைக்குள் பறந்த சீன விமானங்களால் பதற்றம்



தைபே நகரம், ஜூன் 15

தாய்வான் எல்லைக்குள் பறந்த சீன விமானங்களால் அங்கு போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. சீனாவின் இந்த ஆத்திரமூட்டும் செயலுக்கு தைவான் ஜனாதிபதி லாய் சிங் - தே கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

சீனாவின் கட்டுப்பாட்டிலிருந்த தைவான் 1949 இல் தனி நாடாகப் பிரிந்தது. ஆனால், தைவானை இன்னும் தங்களது ஒருங்கிணைந்த பகுதி என சீன கூறி வருகிறது. மேலும், அதனை மீண்டும் தங்களுடன் இணைக்கவும் சீனா முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்கா தனது நாட்டின் பிரதிநிதிகளை தைவானுக்கு அனுப்பியது. இது சீனாவின் கோபத்தை மேலும் அதிகரித்தது. இதனால் தைவான் எல்லையில் அவ்வப்போது போர்ப் பயிற்சி நடத்தி வருகிறது சீனா.

இதன்படி, நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் தைவான் எல்லையில் 7 போர்க் கப்பல்கள் மற்றும் 23 போர் விமானங்கள் கண்டறியப்பட்டன. அவை தைவான் எல்லையில் பல்வேறு போர்ப் பயிற்சிகளை மேற்கொண்டன.

அவற்றில் 19 விமானங்கள் இரு நாடுகளின் எல்லையைத் தாண்டி தைவானுக்குள் பறந்து சென்றதாக இராணுவ அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் நலன்புரி திட்டங்களை வினைத்திறனுள்ளதாக்குங்கள்!

## ஆளுநர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜுன் 15

**அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரித் திட்டங்களை வினைத்திறனுள்ளதாக்கி அதன் பயன்களை மக்களுக்கு துரிதமாக வழங்குவதற்கு ஆளுநர்கள் பங்களிக்கவேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.**

மாகாண ஆளுநர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது மாகாண மட்டத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை விரைவாகத் தீர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் உறுமய காணி உறுதி வழங்கும் திட்டத்தின் வினைத்திறன் என்பன குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் உறுமய காணி உறுதிகளை வழங்கும் வேலைத் திட்டத்தை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு கிராம உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக மற்றுமொரு குழுவிற்கு அதிகாரத்தை வழங்கி நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் மக்களை ஆர்வமூட்டி, அவர்களுக்கு அந்த நன்மையை வழங்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்கு உள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார். (அ)



# இந்திய நிதியமைச்சருடன் இலங்கை தூதுவர் சந்திப்பு

புதுடில்லி, ஜுன் 15

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் சேனுகா செனவிரத்ன மற்றும் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு புதுடில்லியில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இந்திய நிதியமைச்சராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்மலா சீதாராமனுக்கு இலங்கைத் தூதுவர் வாழ்த்து தெரிவித்தார்.

அத்துடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலவும் நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்தார். (அ)

# திருத்தப்பட்ட மின்சார கட்டணம் பொது பயன்பாடுகள் குழுவிடம்!

கொழும்பு, ஜுன் 15

மின்சார கட்டண திருத்தம் தொடர்பான யோசனையை பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு இலங்கை மின்சார சபை அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை அது தொடர்பான யோசனையை மதிப்பீடு செய்து பொதுமக்களின் கருத்துக்களை பெற்றதன் பின்னர் ஆணைக்குழு இறுதி முடிவை அறிவிக்கும் என்று தெரிவிக்கப் பட்டது.

முன்னதாக, முதல் 30 அலகுகளில் ஓர் அலகுக்கான கட்டணம் 8 ரூபாயிலிருந்து 6 ரூபாயாகவும் 31 முதல் 60 வரையான அலகுகளில் ஓர் அலகுக்கான கட்டணம் 20 ரூபாயிலிருந்து 11 ரூபாயாகவும் 61 முதல் 90 வரையான அலகுகளில் ஓர் அலகுக்கான கட்டணம் 30 ரூபாயிலிருந்து 18 ரூபாயாகவும் 91 முதல் 120 வரையான அலகுகளில் ஓர் அலகுக்கான கட்டணம் 50 ரூபாயிலிருந்து 30 ரூபாயாகவும் குறைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அலங்கார மீன் வளர்ப்பு துறையை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானம்

கொழும்பு, ஜுன் 15

அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் கடந்த நான்கு வருடங்களில் 2,632 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதனால், அலங்கார மீன் வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கடற்றொழில் அமைச்சினால் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.



அத்துடன் அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இலங்கை நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தாய் மீன்கள் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, ஆபத்தான மீன்கள் இறக்குமதி செய்யப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட ரீதியாக அலங்கார மீன் வளர்ப்பு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# நெடுஞ்சாலையில் கடமையில் ஈடுபடும் பொலிஸாருக்கு விசேட கொடுப்பனவு!


கொழும்பு, ஜுன் 15

நெடுஞ்சாலை போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுள்ள போக்குவரத்து திணைக்கள பொலிஸ் அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகளை அதிகரித்து புதிய சுற்றறிக்கையை பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வெளியிட்டார்.

அதன்படி பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவான 1,800 ரூபா 6,000 ரூபாவாகவும், பரிசோதகர் தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் 2,000 ரூபா கொடுப்பனவு 7,000 ரூபாவாகவும், போக்குவரத்து நிலைய அதிகாரிக்கு வழங்கப்படும் 2500 ரூபா கொடுப்பனவு 7,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அவர்கள் வெயில், மழை, இடையூறுகளுக்கு மத்தியில் நெடுஞ்சாலைகளில் சுமார் பன்னிரெண்டு மணிநேரம் போக்குவரத்தை கையாள்வது கடினமான பணி என்பதாலும், வாகன புகை உள்ளிட்ட நச்சுக்களை சுவாசிப்பதால் அதிகமானோர் சுவாசக் கோளாறால் அவதிப்படுவதாலும் இந்த கொடுப்பனவுகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 2,500 பேருக்கு புதிதாக ஆசிரியர் நியமனங்கள்!



கொழும்பு, ஜுன் 15

மாகாண மட்டத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே கல்வி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பாடசாலைகளுக்கு 2,500 புதிய ஆசிரியர் நியமனங்களை ஜூலை 03ஆம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் படி, இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல், கணிதம், தொழில்நுட்பம், சர்வதேச மொழிகள் ஆகிய பாடங்களுக்கு 2,100 ஆசிரியர் நியமனங்களையும், 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில மொழிமூல உயர் டிப்ளோமா பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 500 ஆசிரியர்களை நியமிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் மூலம் தேசிய பாடசாலைகளில் குறித்த பாடங்களுடன் தொடர்புடைய ஆசிரியர் வெற்றிடங்கள் பெருமளவில் நீங்கும்.

அத்துடன், ஆங்கில மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் தற்போது ஓய்வு பெற்ற ஆங்கில மொழிமூல ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை கல்வி நிர்வாக சேவை மற்றும் ஆசிரியர் கல்வி சேவை ஆகியவற்றில் உள்ள உத்தியோகத்தர் பற்றாக்குறையை ஈடுசெய்யும் வகையில் துரித வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருகிறது-என்றார். (அ)

# 15 லட்சம் கடிதங்கள் குவிந்தன!

கொழும்பு, ஜுன் 15

தபால் ஊழியர் சங்கத்தின் நடவடிக்கையால் 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் குவிந்துள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

இந்த கடிதங்கள் எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் விநியோகிக்கப்படும் என ஒன்றிணைந்த தபால் ஊழியர் சங்கத்தின் அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

ஊழியர் ஆட்சேர்ப்பு உள்ளிட்ட தமது கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு எதிர்வரும் 24ஆம் திகதி வரை அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அஞ்சல் ஊழியர் சங்கப் போராட்டம் நேற்று முன் தினம் நள்ளிரவுடன் முடிவுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் வர்த்தகருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 15

முறையான அனுமதியின்றி உணவுப் பொருளை இறக்குமதி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவருக்கு 12 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து நாட்டில் இருந்து முறையான இறக்குமதி அனுமதியின்றி உணவு உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்து, யாழில் உள்ள பல்பொருள் அங்காடிகளுக்கு விற்பனை செய்து வந்த நபர் ஒருவருக்கு எதிராக மானிப்பாய் பொது சுகாதார பரிசோதகரினால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவரை எச்சரித்த மன்று, 12 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் பொது வேட்பாளர்...

வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “ஈழத் தமிழரின் பிரதேச வாரியான பிரதி நிதித்துவம் தவறாக பயன்படுத்தப்படவும் - எமது இனத் தின் அரசியல் வேணவா மறுக்கப்படவும் - மலி னப் படுத்தப்படவும் தேர்தல்கள் ஓர் அரசியல் வெளியாகி விடக்கூடாது. எமது மக்களில் பெரும்பான்மையினரின் ஜனநாயக ஆணை இல்லாதோர் எமது பிரதிநிதிகள்போல வந்து எமது வேண வாவை திரிபுபடுத்தாமல் இருக்கவும் பிரேதச ரீதியான தேர்தல் அரசியலை தடுப்பு உத்தியாகவும் பயன்படுத்தவே பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூ ராட்சி தேர்தல்களில் தமிழர்களான நாம் பங்கேற்கிறோம்.

ஈழத் தமிழருக்கான சர்வதேச அரசியலை முன்னெடுப்பதில் கட்சிக ளுக்கிடையே ஒற்றுமையற்ற சூழல் உருவாகியுள்ளது. ஆதலால், கட்சி அரசி யலுக்கு அப்பால்பட்ட நிலையில் ஈழத் தமிழருக்கான ஒரு பொதுப் பிரதி நிதியை தேர்ந்தெடுத்து அவரை ஈழத் தமிழர்களின் நிழல் ஜனாதிபதியாக சர்வ தேசம் கணிப்பிடும் நிலையை தோற்று விப்பதே காலத்தின் தேவையாக உள்ளது.

இருப்பினும், இதை சரிவர செய்ய வேண்டுமானால் எமது தேசத்தை ஆக்கி ரமித்துள்ள தேசத்தின் ஜனாதிபதி வேட் பாளர் எவரையும்விட அதிக வாக்குகளை பெறும் வகையில் தமிழ் பொது வேட்பா ளர் இருக்க வேண்டும். அவர் எமது நிழல் ஜனாதிபதியாக இயங்க வேண்டும்.

2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் இனவழிப்பு போரில் பாதிக்கப்பட்ட மக்களின் நேரடி குரலாக சர்வதேசத் திடம் நீதி கோரிய பயணத்தில் காத்திர மாக பங்கேற்ற தன்மைகளோடு பய ணித்து அனுபவமுள்ளவளான நான் அந்தக் களத்தில் பயிற்சி பெற்றுள்ள அனுபவத்தோடு துணிந்து களமிறங்கத் தயாராக உள்ளேன்.

எந்தக் கட்சியினதும் அல்லது கூட்டி னதும் பிரதிநிதியாக அன்றி ஈழத்தமி ழருக்கான பொது பிரதிநிதியாக என்னை மாற்றிக்கொள்ளவும் பொருத்த மான கொள்கை வகுப்பு மேற்கொள் ளப்படும் போது அதற்கு கட்டுப்பட்டு இயங்கவும் தயாராக உள்ளேன்.

அதுமட்டுமின்றி, இவ்வாறான தன் மைகளோடு என்னை விடவும் ஆற்ற லுள்ள வேறு எவரேனும் நம்பகமாக நிறுவப்படக்கூடிய வகையில் முன்வைக் கப்பட்டால் அவ்வாறான வேட்பாளரை ஆதரிக்கவும் நான் தயாராக உள்ளேன். இதற்கு பொருத்த மான கொள்கை வகுப்பை ஏற்படுத்தப் பட்டுள்ள தமிழர் பொதுச்சபை மேற்கொள்ளவேண்டும். இதைச் சரிவர மேற்கொள்ள இயலுமா என்பதை நிறுவுவதும் அதை நடை முறையில் சாதிப்பதும் ஒட்டுமொத்த ஈழத்தமிழர் தேசத்தின் சமூகப் பொறுப் பாகும் - என்றார். (ஐ-02)

## போதைப்பொருள்...

பாதாள உலகக் கும்பலை கட்டுப் படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் இதுவரை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 454 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், யுக்திய நடவடிக்கை ஜூலை மாதத்திலிருந்து மிகவும் வித்தி யாசமான முறையில் மேற்கொள்ளப்படும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## 70 வீத...

தேயிலை உற்பத்தி செய்யும் அனைத்து நாடுகளிலும், இலங்கை ஏற்கனவே மிக உயர்ந்த உற்பத்தி செலவு, மிகக்கூடிய நாள்சம்பளம் மற்றும் மிகக் குறைந்த உற்பத்தித் திறனுடன் போரா டிக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, சம்பள நிர்ணய சபையால் புதிதாக அறிவிக்கப்பட்ட தேயிலை துறை யிலுள்ள தொழிலாளர்களின் சம்பளம், இந்தியாவின் தேயிலை துறை யிலுள்ள தொழிலாளர்களின் சம்பளத் தைவிட இரு மடங்கு அதிகம். இது உலக சந்தையில் இலங்கை தேயிலையின் உற்பத்தி விலையில் தாக்கத்தை ஏற்படுத் தும். அத்துடன், நாட்டிலுள்ள தேயிலை, இறப்பர் சிறு தோட்ட முதலா ளிகளையும் பாதிக்கும்.

இந்த சம்பள அதிகரிப்பு ஒரு கிலோ தேயிலை உற்பத்திக்கான செலவை 1,450 ரூபாயாக அதிகரிக்கும். ஏல விற்பனை யில் சராசரி விலையான 1,250 ரூபாயை யும் விட அதிகமாக இருக்கும். இது கடுமை யான நிதி சிக்கல்களை ஏற்படுத் தும். தேயிலை தொழில்துறை ஏற்கனவே கடுமையான கடன் சுமையில் உள்ளது. தேசிய சம்பள நிர்ணய சபை கட்டாயப் படுத்திய சம்பள உயர்வால் ஏற்படும் வியாபார நஷ்டம் நிதித்துறையையும் பாதிக்கும். ஏனெனில், பல தோட்ட நிறு வனங்கள் நிதி நிறுவனங்களிடமிருந்து கணிசமான கடனைப் பெற்றுள்ளன. இவர்களால் கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்படும்.

எனவே, 70வீத சம்பள உயர்வுக்கு எதிராக மேன்முறையீட்டு, உயர் நீதிமன் றங்களை நாடவுள்ளோம் - என்றுள்ளது.

## சிங்கள...

செய்கின்றனர் என்றும் பி. பி. சி. தமிழுக்கு வழங்கிய பேட்டியில் தெரி வித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பதவிக் காலத்தில் இலங்கைக்கு எவ்வா றான நன்மைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள் என்று பி. பி. சி. தமிழ் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

மேலும், ‘ இலங்கைத் தீவில் சிங்கள - பௌத்த விரிவாக்கத்துக்கு எந்தவித இடையூறும் இல்லை. இந்தியா சிங்கள - பௌத்த விரிவாக்கத்துக்கு முழுமை யாக ஒத்துழைப்பு வழங்கும், சிங்கள - பௌத்த விரிவாக்கத்துக்கு சீனாவிடம் செல்ல வேண்டிய கட்டாயம் இல்லை’ என்ற நம்பிக்கையை உருவாக்கி இலங் கையை தமது நட்பு சக்தியாக மாற்று கின்ற செயல்பாடுகள் மாத்திரமே நடக் கின்றன என்று சாடினார்.

அத்துடன், இந்தியா தமிழ் தேசத்தை அங்கீகரித்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வகையில் சமஷ்டி அரசமைப்பை இலங்கையில் கொண்டு வர வேண்டும். இதற்காக இந்தியா எமது நட்பு சக்தியாக இருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகின் றோம் - என்றும் அவர் வலியுறுத்தினார்.

## தமிழர்

மதமாற்றத்துக்கு உட்படுத்தவில்லை. பௌத்தர்கள் எந்த இடங்களில் விகா ரையை கட்ட விரும்புகிறார்கள்? சோழர் களால் - தமிழர்களால் கட்டப் பட்ட பழைய விகாரைகள் இருந்த இடங்களிலேயே புதிய விகாரைகளை கட்ட விரும்புகின்றார்கள். 2000 ஆண்டு களுக்கு முன்பு கந்தரோடைக்கு வந்து சென்றவர் மணிமேகலை. நான் சொல்ல வில்லை - மணிமேகலை காப்பியம் சொல்கின்றது. அப்படியென்றால், அந்தக் காலத்தில் பௌத்த கோவில்கள் இருந்திருக்கின்றன. தமிழர்கள் பௌத் தர்களாக இருக்கின்றோம். தமிழ் பௌத் தர்களின் எச்சங்கள் இன்றும் இருக் கின்றன.

“அந்த எச்சங்கள்தான் வெடுக்குநாறி மலையிலும் இருக்கின்றது. குருந்தூ ர்மலையிலும் இருக்கின்றது. அவை தமிழ் பௌத்த எச்சங்களே தவிர, சிங்கள பௌத்த எச்சங்கள் கிடையாது. போரில் நாங்கள் தோற்றபோது வெற்றிக் களிப் பில் இருந்த போர்த்துக்கேயர் அரசு, 400 இந்துக் கோவில்களை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் இடித்தார்கள். இதனை போர்த்துகேயர்களே எழுதியுள் ளார்கள். போர்த்துகேயர்கள் எங்கள் மீது மதத்தை திணித்தார்கள், ஆனால், பௌத் தர்கள் எங்கள் மீது மதத்தை திணிக்க வில்லை,” - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நீர்கொழும்பு கடலில் மூழ்கி தமிழர்கள் இருவர் மரணம்!

கொழும்பு, ஜூன் 15

நீர்கொழும்பு கடலில் நீராடிய தமிழ் மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

நேற்று மாலை நீர்கொழும்பு - குடாப்பாடு பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கடற்கரை வீதியை சேர்ந்த யோகநாதன் நிதிஷ் (வயது 17), அஸரப்பா வீதியை சேர்ந்த ராஜதுரை அரவிந்தன் (வயது 17) ஆகியோரே உயிரிழந்தனர்.

நண்பர்கள் சேர்ந்து நீராடியபோதே அலை அவர்களை இழுத்துச் சென்றது. அவர்களை காப்பாற்ற நண்பர்கள் முனைந்தபோதும் இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

# 18 - 20ஆம் திகதிகளில் பாராளுமன்று கூடுகிறது

கொழும்பு, ஜூன் 15

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூட வுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித் தார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபே வர்த்தன தலைமையில் நடந்த பாராளு மன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத் திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. (ஐ)

# கெஹலிய உட்பட 8 பேரின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 15

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 8 பேரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளி காகந்தை நீதிவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

தரமற்ற இம்யுனோகுளோபுலின் ஊசியை இறக்குமதி செய்தமை தொடர் பில் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட் டது. (ஐ)

## படைகளின்...

பொறிமுறையின் ஊடாக அண்மை யில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என் றும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்பு பற்றிய துறை சார் மேற்பார்வைக் குழு அண்மை யில் அவர் தலைமையில் கூடிய போதே இதனைத் தெரிவித்தார்.

போர் குற்றம் இழைத்தனர் என்று சாட்சிகள் கிடைத்த இராணுவ தள பதிகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன் றத்தில் வழக்கு தொடர்வதற்கு ஏற்க னவே சில நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன. இந்த வெளியகப் பொறிமுறை வெளிவிவ கார அமைச்சால் நிராகரிக்கப்பட்ட போதும், இந்நாட்டு இராணுவ தளபதிகளுக்கு எதிராக தொடர்ந்தும் சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டு வருவ தால் இலங்கை இராணுவ அதிகாரி கள் எந்த நாட்டிலும் கைது செய்யப் படலாம் என்பதே இங்குள்ள ஆபத் தான நிலைமை.

இந்நாட்டில் இடம்பெற்ற போர் புலிகள் அமைப்புக்கு எதிரானதே அன்றி தமிழ் இனத்துக்கு எதிரானதாக அடை யாளப்படுத்துவதற்கான வாய்ப்பு இந்த வெளியகப் பொறி முறைக்கு வாய்ப்புக் காணப்படுகிறது என்றும் இதன் போது சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (ஐ)

## கதிர்காமம்...

ஆலயத்திலிருந்து கதிர்காமம் ஆலயத் துக்கு பக்தர்கள் பாத யாத்திரையாக செல்வது வழக்கம். இவர்கள் முன்னைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட பாதைக ளேயே இதற்கு பயன்படுத்துவது வழக் கம்.

பாதயாத்திரை செல் லும் ஆயிரக்க ணக்கான பக்தர்களுக்காக அம்பாறை யின் உகந்தைமலை காட்டுப் பாதை திரு விழா காலத்தில் திறக்கப்படுவது வழக் கம். ஆனால், இம்முறை காட்டுப் பாதை திறப்பதில் இழுபறி நிலை காணப்படு கின்றது.

மொனராகலையில் நடைபெற்ற கூட்டத்தில் முழுக்க முழுக்க சிங்களத்தி லேயே பேசியே தீர்மானங்கள் எடுக்கப் படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கு மத்தி யில், முன்னர், இம்மாதம் 30ஆம் திகதி என்றும் பின்னர் ஜூலை 1ஆம் திகதி எனவும் அதன் பின்னர் ஜூலை 2ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட் டன.

இறுதியாக ஜூலை 2ஆம் திகதி காட்டுப் பாதை திறக்கப்படும் என்று அறிவித்திருப்பது இந்து பக்தர்களி டையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சுமார் 80 கிலோமீற்றருக்கும் அதிகமான காட்டுப் பாதையை அனைவராலும் 4 நாட்களில் கடந்துவிட முடியாது. எனவே, ஜூலை 2ஆம் திகதிக்கு முன்ன ராகவே காட்டுப்பாதை திறக்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கி. ஜெய சிறில் கூறுகையில்,

காட்டுப் பாதையை ஜூலை 2ஆம் திகதி திறப்பது என்புது தொடர்பான முடிவு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து செல்லும் பாதயாத்திரை குழு வினருக்கு அறவே பொருந்தாது. 4 நாட் களுக்குள் கொடியேற்றத்துக்கு செல்ல முடியாது. காட்டுப் பாதை திறந்து வைக்கப்படுகின்ற கால அவகா சமும் போதாமல் இருக்கின்றது . இந்தப் பாரம்பரிய புனித யாத்திரையை முடக் கத் திட்டமிடப்படுகிறதோ என எண் ணத் தோன்றுகின்றது.

எனவே, இந்தப் புனித பாதயாத்திரை பாரம்பரியமாக நிலைத்து பேணப்படும் வகையில் முறையான தீர்மானங்களை எடுக்க வேண்டும். இது விடயத்தில் ஜனாதிபதி, கிழக்கு ஆளுநரின் தலை யீட்டை கோரி கடிதம் எழுதியுள்ளேன் - என்றும் கூறினார். (ஐ-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் தேர்தல் நடத்துவதில் எந்தவொரு பிரச்னையும் இல்லை!

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 15

**இலங்கையில் தேர்தலை நடத்துவதில் எந்தப் பிரச்னையும் இல்லை என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் மூத்த தலைவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட கடன் வசதிக்கான இரண்டாவது மதிப்பீடு தொடர்பான எண்ணங்களை தெரிவிக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை பிரதிநிதிகள் நேற்று நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனை கூறினார்.

அத்துடன் எந்தவொரு நாட்டின் ஜனநாயகத்தையும் சர்வதேச நாணய நிதியம் மதிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கையில் தேர்தல் நடத்தப்பட்டால் அது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தின் நேரத்தைப் பாதிக்கும் எனவும், உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து புதிய கால அட்டவணையை தயாரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு வருகின்றார் நரேந்திர மோடி!

கொழும்பு, ஜூன் 15

இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய பிரதமரின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றிருந்தார். இந்தியா என்பது எமது பெரிய அண்ணன். எனவே, அந்நாட்டுடன் நெருக்கமான உறவை பேண வேண்டியது அவசியம்.

இந்திய பிரதமர் விரைவில் இலங்கை வரவுள்ளார். திகதி விவரம் இன்னும் உறுதியாகவில்லை. ஓகஸ்ட் மாதமளவில் வருவார் என எதிர்பார்க்கின்றோம்.

ஏனைய அயல் நாடுகளை விடவும் இலங்கை தொடர்பில் இந்தியா கூடுதல் கரிசணையை கொண்டுள்ளது. ஜனாதிபதி ரணிலுக்கு வழங்கப்பட்ட பிரமாண்ட வரவேற்பும், மோடியின் அணுகுமுறையும் இதற்கு சான்றாகும்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி ரணில்தான் என்பது பிரதமர் மோடிக்கும் தெரிந்துள்ளது - என்றார். (அ)

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜூன் 15

மே 2ஆம் திகதி முதல் 44 நாட்களாக தொடர் பணி பகிஷ் கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் நேற்று வெள் ளிக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

சம்பள முரண்பாடு, எம்.சி.ஏ கொடுப்பனவு அதிகரித்து வழங்குதல் போன்ற பல நீண்டகால பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக ஊழியர்சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் யாழ்.பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பேரணியாக வந்து பிரதான வாயிலில் கவனயீர்ப்பு போராட்டமாக இடம் பெற்றது. (அ)

# ஒரு மில்லியன் டொலருடன் மூவர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சியில் 1 மில்லியன் டொலர் அமெரிக்க நாணயத்தாளுடன் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த 3 பேர், இந்த நாணயத்தாளை இலங்கை ரூபாவாக மாற்றுவது தொடர்பில் கிளிநொச்சியிலுள்ள தனியார் வங்கியொன்றின் முகாமையாளரை சந்தித்து பேசுவதற்காக சென்று கொண்டிருந்தபோது கிளிநொச்சி குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான நாணயத்தாள், அதனுடன் தொடர்புடைய இரண்டு ஆவணங்கள் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன. செப்பு வடிவத்திலான மற்றைய இரண்டு ஆவணங்களை வைத்திருந்தாலே அந்த நாணயத் தாளை மாற்ற முடியும் என்றும் கைது செய்யப்பட்டவர்கள் குறிப்பிட்டனர்.

முல்லைத்தீவை சேர்ந்த பிறிதொரு நபர் இந்த நாணயத்தாளை தம்மிடம் தந்து, பணத்தை மாற்றும்படியும், அதன் பின் பணத்தை பிரித்து எடுத்துக் கொள்ளலாமென கூறியதாகவும் கைதானவர்கள் தெரிவித்தனர்.

தனியார் வங்கி முகாமையாளரை அவர்கள் தொடர்பு கொண்டு காசோலையை மாற்றுவது பற்றி பேசியதாகவும், கொண்டு வந்தால் அதனை பார்த்துவிட்டு சொல்வதாக குறிப்பிட்டதாகவும் வங்கி முகாமையாளர் கூறினார். (அ)

# தந்தை செலுத்திய டிராக்டரில் சிக்கி 8 வயது மகள் உயிரிழப்பு!

## மன்னாரில் சோகச் சம்பவம்

மன்னார், ஜூன் 15

தந்தை செலுத்திய உழவு இயந்திரத்தில் சிக்கி மகள் உயிரிழந்த சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூவரசங்குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூவரசங்குளம் பகுதியில் உள்ள விவசாயியான தந்தை ஒருவர் தனது வயலில் உழவு இயந்திரத்தின் மூலம் உழுது கொண்டிருந்தார்.

இதன்போது உழவு இயந்திரத்தின் மக்காட் பகுதியில் அமர்ந்திருந்த அவரது 8 வயதுடைய மகள் திடீரென கீழே விழுந்த நிலையில் உழவு இயந்திரத்தில் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமியின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மீண்டும் டோவல்!



புதுடில்லி, ஜூன் 15

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜித் டோவல் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் அவர் பாதுகாப்பு ஆலோசகராக பொறுப்பேற்றார்.

அவர் இந்தப் பதவியை மூன்றாவது தடவையாக வகிக்கிறார். முன்னதாக டோவலின் நியமனத்துக்கு அமைச்சரவையின் நியமன குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிலையில் இது 2024 ஜூன் 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது. இதன்படி அவருக்கு அமைச்சரவை அந்தஸ்தும் வழங்கப்பட்டுள்ளது.

1968இல் இந்திய பொலிஸ் துறையில் இணைந்த அவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு மிகவும் நெருக்கமானவராவார். மூலோபாய சிந்தனை மற்றும் செயல்பாட்டு திட்டமிடலில் அவர் வல்லவராகக் கருதப்படுகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 21ஆம் திகதி நிலைப்பாட்டை அறிவிக்கின்றார் ஜனாதிபதி?



கொழும்பு, ஜூன் 15

ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடுவது தொடர்பான அறி விப்பை எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி வெளியிடுவார் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்-

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று 2 வருடங்கள் நிறைவு பெறும் நாளில் (ஜூலை 21) தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பை வெளியிடுவார் . இது தொடர்பில் கட்சிக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியான பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும். கட்சிகூடி உரிய வகையில் - உரிய முடிவை எடுக்கும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.